# கள்ளமில்லாத காமத்துப்பால்

வாசுகி கண்ணப்பண்

**முன்னுரை:** சுமார் 2036 ஆண்டுகட்கு முன் மக்களின் வாழ்க்கை, மக்களின் அறிவுத்திறம், அறிவின் தரம், மக்களின் வாழ்வியல் நிலை எப்படி இருந்திருக்கும் என்று எண்ணும் போது இவற்றுக்குச் சாட்சியாக விளங்குவது உலகப் பொதுமறை திருக்குறள்தான்.

**திருக்குறள்:** ஈரடியில் சீர் உயர்வு வாழ்வியல் கருத்துக்களைத் திருக்குறளில் திருவள்ளுவர் தந்திருக்கிறார். திருக்குறளில் அந்தக் காலத்திற்கும் மட்டுமல்ல, இன்றைக்கும் ஏன், நாளைக்கும் தேவையான அனைத்துக் கருத்துக்களும், சாதி, மத, இன, மொழி, நாடு வேறுபாடின்றிக் கையாளக் கூடிய வகையில் பொதிந்து கிடப்பதால் தான், உலகப் பொதுமறை நூல் என்று கூறப்படுகிறது. அதனால் தான் அதிகமான மொழிகளில் மொழிப் பெயர்க்கப்பட்டு பெருமைக் கொள்கிறது. ஒரு மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து நீதிகளையும் அருமையாகத் தந்திருக்கின்றார் திருவள்ளுவர். அதனை அறம், பொருள், இன்பம், என்று முப்பாலாகப் பிரித்துச் சத்தானக் கருத்துக்களால் நமக்கெல்லாம் வித்தாகத் தந்துள்ளார். இது ஒரு அமுதப் பால், அருந்தி பிறவிப் பயன் எய்திட வழி செய்யும் தெய்வீகப் பால். திருஞானசம்பந்தருக்கு அம்மையப்பர் அருளியது போல் நமக்குத் திருவள்ளுவர், திருக்குறளைத் தந்துள்ளார்.

**இன்பத்துப்பால்:** இன்பத்துப்பால். பாலை உறை ஊற்றித் தயிராக்கி, அதனைக் கடைந்து, அதில் திரண்டு வரும் வெண்ணெய் போன்றது ஆகும். பால், தயிராக உள்ளது, அறம், பொருள் என்ற இரண்டுமாகும், இவ்விரு பக்குவங்கள் ஒருவருடைய வாழ்வில் அவசியம் தேவையான ஒன்று, அதன் மூலம் தான் மூன்றாம் பாலான இன்பத்தினை உணரமுடியும், நுகரமுடியும், பயன்பெறமுடியும். "அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை, பொளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை'' அப்பொருளையும் அறத்தோடு ஈட்ட வேண்டும். (247) இதனை வாழ்வில் கடைபிடிக்க. இன்பம்தானே வரும். இந்த இன்பத்துப்பால் பழந்தமிழரின் வாழ்வை ஒட்டி அமைந்தது. வேறு எம்மொழியிலும் காணக் கிடைக்காதது.

இதில் கூறப்படும் இன்பம் என்பது பொதுவான மகிழ்ச்சி அல்ல. உண்மையான பொருள் காமம் என்பதாகும். காமம் என்பது இன்பம், அதிலும் பேரின்பம், அதிலும் உயர்ந்த நிறை பேரின்பமாகும். காலத்தின் சூழ்நிலையினால் பெருமை குன்றி, சிறுமை கொண்டமையால் காமத்துப்பால், இன்பத்துப்பால் ஆகிவிட்டது என்பதுதான்உண்மை. தொல்காப்பியர் "காமம் நிறைந்து இயலும்" என்று கூறுவதில் மனமத்தில் நிறைந்த இன்பம் என்ற பொருளில் கூறியுள்ளார். இந்தக் கமம் என்பது நாளடைவில் காமம் என மாறியிருக்கலாம். அதுவும் தற்பொழுது கூறுவது போல் உடல் வழியாக பெறும் இன்பம் என்ற எண்ணத்தில், காலத்தின் கோலத்தால் வந்திருக்கக்கூடும். ஆனால் இறைவனிடம் ஆழ்ந்த அன்பைக காட்டும் போது ஞானசம்பந்தர் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்று தானே மூன்றாம் திருமுறை, நமச்சிவாயத்திருப்பதிகத்ததில் பாடிப்புளங்காகிதம் அடைந்திருக்கின்றார்.

"எனைத்தொன்றினிதேகாண் காமம் தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன்றல்" (குறள் 1202)

என்று அன்பின் எல்லையில் ஏற்படும் உயர் இன்பத்தை உணர்ந்து உரைக்கின்றார் தெய்வப் புலவர். இது இயற்கையில் ஏற்படும் உயர் இன்ப உணர்வு இது மனிதனுக்கு மட்டுமல்ல ஒரறிவுஉயிரிலிருந்து ஆறறிவு உயிர்வரை ஏற்படுத்தப்பட்ட இயல்பான உணர்வு ஆகும். காமம் என்ற அதாவது இன்பம் என்ற நிறை பேரின்பத்தை மூன்று கண்ணோட்டங்ளில் பார்க்கலாம்.

1. இயற்கைக் கண்ணோட்டம்
2. மெய்ஞ்ஞானக் கண்ணோட்டம்
3. விஞ்ஞானக் கண்ணோட்டம்

காமத்தின் காரணம காமம் என்கின்ற இன்பம் எல்லா உயிரினங்களுக்கும் எற்படுகின்ற இயற்கையான உணர்ச்சி ஆகும். இதனையே

“எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூ உம் மேவற்றாகும்” (தொல் - பொருள் - 29)

என்று தொல்காப்பியம் கூறி உறுதி செய்கின்றது.

இறைவன் இயற்கையாய் இந்த காமத்தை அல்லது இன்பத்தை எற்படுத்தியதற்கு அடிப்படைக் காரணம் என்ன என அறறிவு பெற்ற நாம் சிந்திக்கும் போது தெளிவான, அறிவியலான விடை கிடைக்கின்றது. காமமட இல்லையெனில் உலக வளர்ச்சி என்னாவது? மேலும் இவ்வுணர்ச்சியில் இணையும் போது அன்பு ஆழமாகின்றது. இது வாழ்க்கைக்கு அசைக்கமுடியாத ஆணிவேராகின்றது. இப்படிக் கணவனும் மனைவியும், உயிரும் உடலுமாகப் பிரிக்கமுடியாத ஆழ்ந்த பந்தத்தால் பிணைக்கப்படுகிறார்கள்.

இல்லறம் என்ற நல்லறம் பெண் ஏதோ ஒரு வீட்டில் பிறக்கின்றாள். ஆண் முன்பின் தெரியாத ஒரு வீட்டில் பிறக்கின்றான்.

ஒன்றே வேறே என்றிருபால் வயின்
ஒன்றிஉயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப” (தொல் பொருள்-90)

என்பதன்படி இவர்களை இறைவன் கணக்குப் போட்டு இணைக்கின்றார். இப்படிப்பட்ட உறவு நிலையானது. ஊர், பேர், சொந்தம் பந்தம் அறியாது, ஆண்,பெண் உறவு இணைக்கப்படும் போது Sex is thicker than Blood என்ற வகையில் அங்குக் கணவன், மனைவி என்ற தெய்வீக ஒப்பந்தம் உண்டாகின்றது, என்பதுதானே உண்மை. இதை சமுதாய ஒப்பந்தம என்பார் ரூசோ என்ற அறிஞர். அதன் மூலம் அப்பா, அம்மா என்ற உயர் தெய்வீக நிலை ஏற்படுகின்றது. அதனால் தான் அப்படிப்பட்ட பிணைப்பால் வரும் தாய்,தந்தை என்ற நிலையை அன்னையும், பிதாவும் முன்னெறி தெய்வம் என்று கூறியுள்ளனர். இப்படிப்பட்ட தெய்வீகப் பந்தத்தால் குழந்தைகள் என்ற காந்தம் உருவாகின்றது. காந்தம் என்றால், ஈர்ப்பு இருக்கத்தானே செய்யும். எத்தனைதான் சச்சரவு வேறுபாடுகள் தோன்றினாலும் தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்றபடி Blood is thicker than water இயற்கையில் பாசம், நேசம் எனும் அன்பு பிணைப்பு ஏற்படுகின்றது. இதனால் குடும்பத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கக்கூடிய மனப்பக்குவம் இயல்பாக ஏற்படுகிறது. மனம் விரிவடைகிறது. தன்னலம் குறைந்து, பொது நலம் அதிகரிக்கின்றது. எனவே இல்லறம் என்ற நல்லறத்திற்கு அடிப்படையான இன்பத்துப்பால் என்பது, இயற்கையானது, அறிவியலானது மேலும் தெய்வீகமானது.

இயற்கைக் கண்ணோட்டத்தில் காமம்: இன்பம் என்பது அனைவருக்கும் பொதுவானது. ஆனால் வள்ளுவர் காட்டும் இன்பம் அதாவது காமம் என்பது கணவனுக்கும் மனைவிக்கும் மட்டுமே எற்படும் உண்மை அன்பின் நிறைவு ஆகும். அதனால் தான் இன்பம் என்றசொல் இன்பத்துப்பாலில் இரண்டு முறைதான் உபயோகப்படுத்தப்படுகிறது. ஆனால் காமம் என்ற சொல்லோ 46 இடங்களில் இடம் பெற்றுள்ளது. அது மட்டுமல்ல இன்பம் என்ற சொல் பின்வரும் குறள்களில் காமமும் இணைந்தே இடம் பெற்றுள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

“இன்பம் கடல் மற்றுக் காமம் அ∴து தடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது” (குறள்1166)

“ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின் (குறள்1330)

மேலும், இயற்கையினுடைய விநோதத்தின் விளையாட்டையும், சிந்தித்துப் பார்க்கவேண்டும். இயற்கை, ஆண்பால் உணர்வை வைத்து, உலகத்தையே

சுழற்சியுடன் இயங்கச் செய்யும் இறைவனின், இயற்கையுள்ள அற்புதப் படைப்பாற்றலின் விந்தையே விந்தை!

இயற்கையான காமம் என்கின்ற இன்பம் ஒரு ஜீவசக்தி, உன்னத உந்து சக்தி, சுழற்சியை ஏற்படுத்தும் விந்து சக்தி, ஜீவராசிகள் அனைத்துக்கும் தேவையான இச்சா சக்தி, ஆண்டவன் அளித்த தெய்வீக சக்தி, இதனையே திருமூலர் திருமந்திரத்தில்.

“நாதத்தில் விந்துவும் நாத விந்துக்களில்
தீதற்றகம் வந்த சிவன் சத்தி என்னவே
பேதித்து ஞானங்கிரியைப் பிறத்தலால்
சாதித்த விச்சையில் வந்தெழும் விந்துவே” (382)

என்று சிறப்பாகச் செப்புகின்றார்.

ஆகவே, அன்பினால் கணவன் மனைவி, உடலும் உயிருமாக, ஜீவாத்மா பரமாத்வாக விளங்குகின்றார்கள். உடல் இல்லாது உயிர் இருக்க இயலாது. உயிர் இல்லாது உடல் இயங்க முடியாது. கணவன் இல்லாது மனைவி இல்லை. மனைவி இல்லாமல் கணவன் இல்லை. இத்தெய்வீகத் தொடர்பு, பிரிதல் அறியாத் தொடர்பு, பிரிக்க இயலாத தொடர்பு, உடல், உயிர் பிணைந்த தொடர்பு, இதனை நம் வள்ளுவர்.

“உடம்பொடு உயிரிடை என்ன ; மற்ற
மடந்தையொ டெம்மிடை நட்பு” (குறள்1122)

என இணைபிரியாது வாழ்வதே இல்லறம் காட்டும் நல்லறம் என்று வலியுறுத்துகின்றார். மிக முக்கியமாகக் காமம் சம்பந்தப்பட்டது என்றால் அது குறிப்பிட்ட காலம் வரை தொடரும். அதனையே திருமூலர் திருமந்திரத்தில்.

“புணர்ச்சியுள் ஆயிழைமேல் அன்புபோல்
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்க வல்லார்க்கு
உணர்ச்சியில்லாது குலாவி உலாவி
அணைத்தலும் இன்பம் அதுவிதுவாமே” (283)

என்னும் பாடலில் நயம்பட உரைத்துள்ளார்.

ஆனால் உண்மைக் காமம் ஆத்மாவுடன் தொடர்பு கொண்டது. இது பிறவி தோறும் தொடரும், இப்படி உடலும், உயிருமாக வாழும். தம்பதிகள் எத்தனைப் பிறப்பெடுத்தாலும் இதே உறவுடன் கணவன், மனைவியாகப் பிறக்கவேண்டும் என்ற எண்ணத்தில்

“இம்மைமாறி மறுமையாயினும் நீயாகியர்
எம் கணவனை யானாகியர் நின் நெஞ்சு நேர்பவனே” (49)

எனக் குறுந்தொகையில் பாடப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட இயற்கை உறவு, தெய்வீக இல்லற உறவாக அமைந்தால் சின்ன வீடுதான் ஏற்படுமா? சிவப்பு விளக்குத்தான் பகுதிக்குத்தான் செல்வாரா? இன்று ஆட்டிப்படைக்கும் “எய்ட்ஸ்” என்னும் நோய்தான் வதைத்திடுமா?

மேலும், அறநூல் படைத்த வள்ளுவ ஆசான் குடும்பத் தலைவன் பரத்தராக வாழ்வதை விரும்பவில்லை. பெண்மைகுரிய பரத்த என்ற சொல்லுக்கு ஆண்பாலான சொல்லான பரத்தன் என்ற சொல்லை உருவாக்கியுள்ளார் திருவள்ளுவர்.

“பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொது உண்பர்
நண்ணேன்பரத்தநின்மார்பு” (குறள் 1311)

என்ற குறள் மூலம் காமத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே அளவுகோல் கொண்டு அளந்துள்ளது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

மெய்ஞ்ஞானக் கண்ணோட்டத்தில் காமம் நமது சைவ சமயத்தில் “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்று கூறினாலும் அவரவர்கள் கண்ணோட்டத்தில், அவரவர்கள் எண்ணத்தில் பலவித உருவங்கள், பலவிதப் பெயர்களுடன் இறைவனை வணங்குகின்றார்கள். அதிலும் குறிப்பாக இறைவனை ஒரு குடும்பமாகத் தாய், தந்தை, பிள்ளை, மாமா, குரு, சிஷ்யன் என்ற பலவித நிலைகள் மூலம், இறைவ னை வாழ்வியலில் வழிகாட்டும் வகையில் படைத்து, நம் வாழ்வை நெறிப்படுத்தி உள்ளனர். அதே போல் இறை பக்தர்கள், இறைவனைத் தலைவனாக தலைவியாக, காதலனாக, காதலியாக, தாயாராக, தங்கையாக குழந்தையாக, தாதியாக, சேவகனாக, பல நிலைகளில் உணர்ந்து பாடி பரவசமடைந்து உள்ளார்கள். உதாரணமாக ஆண்டாளை எடுத்துக் கொண்டால், திருப்பாவையில் பரந்தாமனை மணாளனாக அவர் காண்கின்றார். 19வது பாடலில்

“வைத்துகிடந்த மலர்மார்பா வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய் நீ உன் மணாளனை
எத்தனைபோதும் துயிலெழவொட்டாய்”

என்று அவர் பாடியுள்ளதிலிருந்து இதை உணரலாம்.

அதேபோல் ஆண்டாளைப் பெண்டாட்டியாக உருவகித்த மற்றுமொரு பாடலையும் காணலாம்.

“முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வ பெண்டாட்டி நீ
எற்றுக்குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்”

என்பதாகும்.

அதேபோல் ஆண்டாள் அருளிய நாச்சியார் திருமொழியிலும் 8வது பாடலில்

“இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மையுடையவன் நாராயணன் நம்பி
செம்மையுடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்க கனாக் கண்டேன் தோழி நான்”

என்று அமைந்துள்ளது. மானிடப் பெண்ணான ஆண்டாள், இறைவனைக் கணவனாக ஏற்று பாடியுள்ளதிலிருந்து உண்மை அன்பின் காமத்தின் வலிமையை உணரலாம். அதே போலப் பாரதியாரும் கண்ணனைப் பல நிலைகளில் தொடர்ந்து பாடுகின்றார். உதாரணமாகக் கண்ணனைக்

காதலனாக,

“கண்ணன் மனநிலையே தங்கமே தங்கம்
கண்டு வரவேனுமடி தங்கமே தங்கம்”
காதலியாக,
“சுட்டும் விழிச்சுடர்தான் கண்ணம்மா
சூரிய சந்திரரோ” என்றும்
குழந்தையாக,
“சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா” என்றும்
விளையாட்டுப் பிள்ளையாக,
“தீராத விளையாட்டுப் பிள்ளை”

என்றும் மகிழ்ந்தார். அதே போல் அபிராமி பட்டரும், அம்மையை அபிராமி அந்தாதியில் உண்மையான அன்பின் காரணமாக”

“உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே”

என்று பல பாடல்களில் பேரின்பத்தின் காரணமாக வர்ணித்து பாடுகின்றார்.

இப்படிப் பேரின்பம் உணர்வது நம் உடலிலுள்ள ஐம்புலன்களால்தான், இந்த ஐம்புலன் வழி இன்பத்தைப் பற்றித் திருவள்ளுவர் புணர்ச்சி மகிழ்தல் என்ற அதிகாரத்தில்

“கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றிலும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள” (குறள்1101)

எனக் கூறியுள்ளார்.

இதில் கண்ணால் கண்டும், காதால் கேட்டும், நாவால் ருசித்தும், மூக்கால் முகர்ந்தும், உடலால் தீண்டியும், மகிழக்கூடிய ஐம்புலன் இன்பங்களும் பெண்ணிடம்தான் உள்ளது என்று கூறுகிறார். இது இல்லற வாழ்க்கை.

இந்த வழியில் மெய்ஞ்ஞானத்தில் பார்க்கும் போது திருநாவுக்கரசர் சமண மதத்திலிருந்து சைவ மதத்திற்கு மாறிவிட்டததால் வெகுண்டு பல்லவ மாமன்னன் மகேந்திரவர்மன் பல்வேறு தண்டனைகளை அளித்தான். அதில் ஒன்று அப்பரைச் சுண்ணாம்புக் காளவாயில் போட்டு எரிக்க நினைத்தாகும். தெய்வீக அன்பால் இவர் ஒரு சிறிதும் துன்பத்தை உணர்ந்தாரில்லை மாறாக

“மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிளவேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே”

என்று ஐந்தாம் திருமுறையில் முதல் பாடலில் பாடுகின்றார்.

உண்மையான, தெய்வீகமான அன்பால் இன்பத்தை உணர்ந்தார். ஐம்புலனான செவியின் இன்பத்திற்கு மாசில் வீணையையும், கண்ணுக்கு மாலை மதியத்தையும், மூக்கிற்கு வீசுகின்ற தென்றலையும், உடலுக்கு வீங்கிள வேனிலையும், நாவுக்குகப் பொய்கை நீரையும் தான் உணர்த்தியதே தவிர, ஒரு சிறிதும் துன்பத்தை உணரவில்லை.

இதே ஐம்புலன் இன்பத்தைப் பற்றிப் பெருங்கதை ஆசிரியர் கூறுகின்றார். ஒரே இடத்தில் பிரம்மன் ஐந்து சுவைகளை ஒருங்கே தலைவியிடம் வைத்து விந்தை செய்கின்றான் என்று பிரம்மனைத் தலைவன் பாராட்டுவது போல அந்நூல் பாடல் வரிகள் உள்ளன.

“வாயினும் செவியினும் கண்ணினும் மூக்கினும்
மேத செய்யினும் மோதன் இன்றி
உண்டும் கேட்டும் கண்டும் நாறியம்

உற்றும் மாற்றிவை அற்றம் இன்றி
ஐம்புல வாயினும் தம்பலம் பெருக
வைகல் தோறும் மெய்வகைத் தெறிவான்"

என்னும் வரிகளால் விளக்குகின்றார்.

ஆகவே ஐம்புலன் உணர்ச்சியோடு, உண்மை அன்போடு, இறைவனையோ, இறைவியையோ, காதலியையோ, எண்ணும் போது யாராக இருப்பினும் தெய்வீகத் தன்மையே உருவாகிறது. என்பதை நன்கு உணரலாம்.

குறிப்பறிதல் என்ற் அதிகாரம் திருக்குகறளில் இரண்டுமுறை வருகிறது. ஒன்று பொருட்பாலில் 71வது அதிகாரம் இரண்டாவது காமத்துபால்ல் 110வது அதிகாரம். பொருட்பாலில்

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்" (குறள் - 706 )

என்ற குறளில் உள்ளத்தினை பிரதிபலிப்பது முகம் எனக் கூறுகின்றார். காமத்துப்பாலில் குறிப்பறிதல் எனிற அதிகாரத்தில்

"அசையியற்குண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்"
பசையினள் பைய நகும். (குறள் 1098)

என்ற பாடல் உள்ளது

இதனுடைய பொருள் அசையும் மெல்லிய இயல்பினை உடைய அவளுக்கு அப்போது ஓர் அழகு உள்ளது. இது குறிப்பறிதலாக அன்பு, முகத்தில் கொண்ட இளநகை என்கிறார்.

இப்பாடலின் ஞானக்கருத்தை, ஞானக்கண்கொண்டு பார்த்தால் அண்ட சராசரங்களும் ஒரு சக்தியினால் ஆளப்படுகிறது. இந்தச் சக்தி நிலைத்திருக்கும், போது அழகு தெரிவதில்லை.

அச்சக்தி மெல்லிய அசைவால் சிவமாகின்றது. அதுதான் ஆனந்த நடனம் அதன் காரணமாக. உலகமானது இயங்குகின்றது. இயக்கதிதின் காரணமாக அழகானது வெளிப்படுகின்றது. இதனை இரசிக்கும் எவருக்கும் அவருடைய மெல்லியமுகத்தின் புன்சிரிப்பில் ஒளிரும் ஒளி ஞான ஒளியாக உணர்த்தப்படுகின்றது. இது பேருண்மையாகும் ஆகவே சிவன் என்ற Potenial Energyயுடன் சக்தி என்ற Kinetic Energy இல்லையெனில் உலக இயக்கமேயில்லை என்பதை உணரலாம்.

நமது சைவ சமயத்திலும் சரி, திருகிகுறளிலும் சரி, ஒருவருடைய வாழ்வில் இன்பம், துன்பம் அவனது ஊழ்வினையின் படி அமைகின்றது என்று கூறப்படுகிறது. இதை பழமொழிகளும் உறுதி செய்கின்றன.

"வினை விதைத்தவன் வினை அறுப்பான்
தினை விதைத்தவன் தினை அறுப்பான்"

என்றபடி ஊழின் பயனால் உடல்கள் ஒடுங்கி, பின் மீண்டும் தோன்றுவதற்குரியது. இவை, வினையின் பயனால் வருகின்றது., அப்படியானால் உயிர் உடல் எடுக்கும் போது வினையும் உடன் தோன்றுகிறது. உயிர் எடுத்த உடல்களே அதனதன் செயல்களுக்கு ஏற்ப வினைகளைத் தோற்றுவித்துக் கொண்டன, என்பதைச் சைவ மக்கள் அனைவரும் அறிவர். இதனைக் கணியன் பூங்குன்றனார் என்னும் பெரும்புலவர்

"தீதும் நன்றும் பிறர்தரவாரா"

எனப் புறநானுற்றுப் பாடலில் பாடியுள்ளார்.

"வினையின் நீங்கிய விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்.

எனத் தொல்காப்பியத்திலும் அறியலாம்.

"அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்
எவரெவர்க்கு உதவினர் எவரெவர் உதவிலர்
தவறவர் நினைவது தமை உணர்வதுவே"

என்று சிவபோக சாரமும் கூறுகின்றது.

"ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று
சூழினுந்தான்முந்துறும் (குறள் 380)

இதனை வேறு வழியாகவும் வள்ளுவர் கூறுகின்றார்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழிகாட்டிவிடும்" (குறள் 28)

என்று ஊழ்வினையே அவர்தம் வாழ்க்கையைக் காட்டிக் கொடுத்துவிடும், என்கிறார் செந்நாப் போதர். இப்பேர்பட்ட ஊழ்வினையால் ஏற்பட்ட பெருங்கடலைக் கடக்க இறைவன் திருவடியை நினைக்க வேண்டும் என்றார் வள்ளுவர் இதனை

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடிசேராதார்" (குறள்10)

என்ற குறள் தெளிவுப்படுத்துகிறது.

ஆகவே முன்வினைப்பயனால் பிறப்பெடுக்கின்றோம். முனவினைப்பயனால் உறவுகளும் நிர்ணயிக்கப்பட்டு, கணவன், மனைவி, பிள்ளைகள், குரு முதலிய உறவுகள் எடுத்து உலகம் என்னும் நாடக மேடையில் அனைத்து உறவுகளையும் பெறுகின்றோம். உணமை அன்பால் உறவைப் போறிக் கடமை ஆற்றுகின்றோம். இறுதியில் அந்த உண்மை அன்பால், காதலால், கள்ளமில்லாக் காமத்தால், இறைவனடியும் அடைகின்றோம். என்பதே மெய்ஞ்ஞான அனுபவமாகும்.

மேலும் ஒருபடி மேலாக சிவபெருமானின் இரண்டு திருவடிகள் போன்ற சிறப்பினைக் கொண்டன திருக்குறள் என்று போற்றுகின்றார் சிவப்பிரகாச சுவாமிகள்.

என் அடிகள் வெண் குறள் நேர்
அடியிரண்டும் என் தலைமேல்"

என்று திருவெங்கைக் கலம்பகம் எனும் நூலில் சிவப்பிரகாசர், திருக்குறளின் இரண்டு அடிகளைச் சிவபெருமானின் இரண்டு திருவடிகளாகப் போற்றுகிறார் என்று ஜனவரி 2005 திருக்கோவில் பத்திரிக்கை தெரிவிக்கின்றது.

**விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் காமம** ஆண், பெண் படைப்பு இலலையெனில் உலக வளர்ச்சியேது, சுழற்சி ஏது? உறவு ஏது? அன்பு ஏது? பிணைப்பு ஏது, இணைப்பு ஏது? ஓரிரறவிலிருந்து ஆறறிவுவரை உணர்ச்சியின் மூலம் வளர்ச்சியை, இயற்கையாக, விஞ்ஞான அடிப்படையில் இறைவன் படைத்துள்ளார். இந்த இயற்கையை மீறி வாழும் போது பலவித மாறுதல்கள், ஊறுகள், இடர்ப்பாடுகள், ஏற்படுகின்றன. இயற்கையோடு இணைந்து வாழ்வதே நம் கடமையாகும். இது விஞ்ஞான வழி வாழ்க்கையாகும். நம் உடல் ஓர் இயந்திரம். பலவித வேலைகளை ஒன்றுக் கொன்று பிணைத்துச் செய்யப்பட்ட பணிக்கப்பட்ட, அதிசயக்கத்தக்க மாபெரும் இயந்திரமாகும். ஒவ்வொன்றும் அதனதனுடைய வேலையை, அந்தந்த அளவோடு செய்தால் தான் உடல் இயக்கம் சரியாக இருக்கும், உடல் என்ற இயந்திரமும் நல்லவகையில் செயற்பட முடியும். நுரையீரல் அதன் வேலையைச் செய்யவேண்டும். இப்படி ஒவ்வொரு உறுப்பும் அதனதன் வேலையைக் கணிக்கப்பட்ட வகையில் செய்தால்தான் உடல் ஆரோக்கியமாக இருக்க முடியும். உள்ளமும் ஆரோக்கியமாக இருக்கும்.

மனித இன வளர்ச்சிக்கு மிக முக்கிய உறுப்பு கருப்பை. அது உரிய வேளையில், அதன் வேலையைச் செய்யாவிட்டால் கருப்பைக் கோளாறுகள் ஏற்படுகின்றன. குறிப்பிட்ட காலம் கடக்கும் போது கருப்பை, தன் கடமையை ஆற்றமுடியாத நிலைக்கு ஆளாகின்றது. உடலானது எல்லா அவையங்களும் இணைந்த மாபெரும் வியப்பிற்குரிய இயந்திரமாகும். இதில் ஒன்று பழுதுப்பட்டாலும் இதனால் மற்ற உறுப்புகளும் பாதிக்கப்படும் நிலை ஏற்படுகிறது. இதனால் மனபாதிப்பும் ஏற்படுகின்றது. ஆகவே காமத்தின வழியாக உடல் சுழற்சியும், உலகச் சுழற்சியும் ஏற்படுகிறது என்பது விஞ்ஞான விதியாகும். இக்காமத்தை ஏற்படுத்துவதே ஊடலும்இ கூடலும் ஆகும். இதனை வள்ளுவர்

“ஊடல் உணர்தல் புணர்தல் இவை காமம்
கூடியார் பெற்ற பயன்” (குறள் 1109)

“ஊடலில் தோற்றவர் வென்றார்; அதுமன்னும்
கூடலின் காணப்படும்” (குறள் 1327)

ஊடுதல் காமத்திற்கின்பம், அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்” (குறள் 1330)

என்று அழுத்தமாகக்காமத்தின் தேவையை வலியுறுத்துகின்றார். இப்படிப்பட்ட காமத்தால கிடைக்கும் பயன் மக்கட்பேறு. வாழ்க்கையின் விஞ்ஞான தத்துவத்தை உணர்த்தவே வள்ளுவர் இல்வாழ்க்கை, வாழ்க்கை துணைநலம் அதனை தொடர்ந்து மக்கள்பேறு என்று வகையாக வரிசையாக வகுத்துள்ளார். இதற்கும் அடிப்படை கிரியா ஊக்கி காமமாகும். இது அனைத்து ஜீவராசிகளுக்கும், இயற்கையாக விஞ்ஞான அடிப்படையில் தரப்பட்ட மெய்ஞ்ஞான நிலை ஆகும். அதனால் தான் இறைவனையும் குடும்பமாகவே முன்னோர் சித்தரித்துள்ளனர்.

இந்த விஞ்ஞானக் கருத்தை, 8-ம் திருமுறை வலலியுறுத்துகிறது. மாணிக்கவாசகரை புத்தமதத் தலைவர்கள் வாதுக்கிழுத்து ஊமையாகினர். இதைக்கண்டு அரசன் தன்பெண் பிறவி ஊமை, பேசவைக்க வேண்டும் என வேண்டினார். இறைவன் நினைத்தால் முடியும் எனக்கூறி அப்பெண்ணைக் கேள்வி கேட்க, ஊமைப் பெண் பதிலளிப்பதாகப் பாடல் அமைந்துள்ளது.

“பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானால் சாழலோ?
தென்பால் உகந்தாடும் தில்லை சிற்றிம்பலவன்
பெண்பால் உகந்தாடும் பெரும் பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலேனேல் பேதாயிரு நிலத்தோர்
விண்பாலி கெய்தி வீடுவர்கான் சாழலோ”

என்று தெள்ளந்தெளிவாகக் கூறுவதிலிருந்து காமம் என்பது ஒரு கட்டாயமான, இயற்கையான மெய்ஞ்ஞான விஞ்ஞான, கள்ளமில்லா நிலை என்று உணரலாம்.

**முடிவுரை:** ஆகவே உண்மையான, தூய அன்பு என்ற காமம், புனித இல்லறத்தில் இன்பமும், இன்பம் வழி, மனித சுழற்சியையும் தருகிறது. இத்தூய காமம் இறைவனாலும், மனிதன், மரம், செடி, கொடி, விலங்கு என எந்த உறவு நிலையானாலும், இன்பம், பேரின்பம், நிறை பேரின்பம், தருகின்றது. ஆகவே இயறகை

அடிப்படையிலும், மெய்ஞான அடிப்படையிலும், விஞ்ஞான அடிப்படையிலும், உணரப்படுகின்ற காமத்தை உணர்த்துகின்ற கள்ளமில்லாக் காமத்துப்பாலைக், கள்ளமில்லா உள்ளத்துடன் கற்று, நிறை பேரின்பம் அடைவோமாக!